
வேதாத்திரியப்
பார்வையில்
திருவாசகத்தின்
சென்னிப் பத்து
அருள்நிதி மன்னார்குடி
பானுகுமார்.

# வேதாத்திரியப் பார்வையில்

# திருவாசகத்தின் சென்னிப்பத்து

அருள்நிதி மன்னார்குடி பானுகுமார்

## இதனுள்ளே

1. ஜோதி ஜோதி ஜோதி
2. நால்வகைப் பேறுகள்
3. இறை உறவு-சேவகன் நாயகன்
4. ஞானமும் முக்தியும்
5. மாய வாழ்க்கையை மெய்யென்று
6. சுத்தவெளியில் நிலைத்திருப்போம்
7. மெய்த்தன்மையின் வல்லமை
8. அன்பர்களுக்கு அருளும் குற்றம் அற்றவன்
9. வல்வினைப் பகை மாய்த்திடும்
10. மூல விதை எது?

## 1. ஜோதி ஜோதி ஜோதி

ஜோதி ஜோதி ஜோதி சுயஞ்
ஜோதி ஜோதி ஜோதி பரஞ்
ஜோதி ஜோதி ஜோதி யருட்
ஜோதி ஜோதி ஜோதி சிவம்.

2. வாமஜோதி சோமஜோதி வானஜோதி ஞானஜோதி
மாகஜோதி யோகஜோதி வாதஜோதி நாதஜோதி
ஏமஜோதி வியோமஜோதி ஏறுஜோதி வீறுஜோதி
ஏகஜோதி ஏகஜோதி ஏகஜோதி ஏகஜோதி.

3. ஆதிநீதி வேதனே ஆடல்நீடு பாதனே
வாதிஞான போதனே வாழ்கவாழ்க நாதனே.
(வள்ளலார்)

தேவ தேவன்மெய்ச் சேவகன்
    தென்பெ ருந்துறை நாயகன்
மூவ ராலும் அறியொணா
    முத லாய ஆனந்த மூர்த்தியான்
யாவ ராயினும் அன்ர் அன்றி
    அறியொ ணாமலர்ச் சோதியான்
தூய மாமலர்ச் சேவடிக்கண்நம்
    சென்னி மன்னிச் சுடருமே.” (579)

அடியார்களுக்கு அன்றி வேறுயாராலும் அறியமுடியாத சோதியாய் மலர்ந்து நிற்பவன்தான் இறைவன் என்று பாடுகிறது திருவாசகம்.

- தேவர்களுக்கும் மேலான தேவன்.
- வீரன்.
- தெற்கிலுள்ள திருப்பெருந்துறைக்குத் தலைவன்.
- பிரம்மா, திருமூலர், உருத்தரன் ஆகிய மூவர்க்கும் அறிய முடியாத இன்ப வடிவானவன்.
- அடியார்களுக்கு அன்றி வேறு யாராலும் அறியமுடியாத சோதியாய் மலர்ந்து நிற்பவன்.
- அவனது தூய தாமரைமலர் போன்ற சிவந்த திருவடிகள்நம் முடைய தலை மீது நிலைபெற்றுத் தங்கி ஒளிரட்டும்.

ஜோதி என்றால் என்ன? விடையாக வருகிறார் மகரிஷி.

திருவாசகத்தில் ஜோதி (42 இடங்கள்)

1. மாசற்ற ஜோதி மலர்ந்த மலர்ச்சுடரே 1-62
2. ஜோதியனே, துன்இருளே தோன்றாப் பெருமையனே 1-72
3. தூண்டு ஜோதி தோற்றிய தொன்மையும் 2-74

4. கருஆர் ஜோதியில் கரந்த கள்ளமும் 2-55
5. தூயமேனி, சடர் விடு ஜோதி 2-112
6. அருக்கனில் ஜோதி அமைத்தோன் 3-20
7. பரம்பரம் ஜோதிபட பரனே போற்றி 4-222
8. பரஞ் ஜோதி 88
9. ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் ஜோதியை 155
10. பாசம் பரஞ் ஜோதிக்கு என்பாய் 156
11. கேழில் பரஞ் ஜோதி கேழில் பரங்கருணை 162
12. ஜோதி திறம்பாடி, சூழ்கொன்றைத்தார் பாடி 168
13. ஜோதியுமாய் இருள் ஆயினார்க்கு 214
14. மாஏறு ஜோதியும் வானவரும் தாம்அறியா 215
15. பவமாயம் காத்து என்னை ஆண்டுகொண்ட பரஞ்ஜோதி 238
16. பத்திக் கடலுள் பதித்த பரஞ்ஜோதி 246
17. தங்குலவு ஜோதித் தனிஉருவம் வந்தருவி 335
18. ஜோதி மணிமுடி 346
19. என் உள் எழு பரஞ்ஜோதி 386
20. என் மனத்துள்ளே எழுகன்ற ஜோதியே 391
21. ஆனந்தமாக்கும் என் ஜோதி 393
22. ஜோதியாய் தோன்றும் உருவமே 394
23. பாரோர் விண்ணோர் பரவிஏத்தும் பரனே பரஞ்ஜோதி 422
24. கடிஆர் ஜோதி கண்டு கொண்டு 424
25. முத்து மாமணி மாணிக்க வயிரத்த பவளத்தில் முழுச்ஜோதி 432
26. எழுதரு சுடர்ச்ஜோதி 433
27. ஜோதியே! சுடரே! சூழ்ஒளி விளக்கே! 456
28. இருள் நீங்க ஜோதி இனித்தான் துணியாயே 489
29. கதிரை மறைத்தன்ன ஜோதி 525
30. ஈண்டிய மாயா இருள்கெட எப்பொருளும் விளங்கத் தூண்டிய ஜோதியை 529
31. துன்பமே பிறப்பே இறப்பொடு மயக்காம் தொடக்கெலாம் அறுத்த நற்ஜோதி 543
32. பரஞ்ஜோதி, பசுபதீ! 555
33. யாவர் ஆயினும் அன்பர் அன்றி அறிஒணா மலர்ச் ஜோதியான் 577
34. பொய்தனை ஒழிவித்திடும் எழில்கொள் ஜோதி 584
35. முத்தனை முதலர் ஜோதியை முக்கண் அப்பனை 586

36. மறை பயின்ற வாசகன் மாமலர் மேஜோதி 587
37. ஒளிவளர் ஜோதி எம் ஈசன் 593
38. தூவெள்ளை நீறணி எம்பெருமான் ஜோதி மயேந்திரநாதன் 595
39. மெய்யடியார்க்கு அருள்துறை அளிக்கும் ஜோதியை 602
40. இன்பம்பெருக்கி இருள் அகற்றி எஞ்ஞான்றும் துன்பம் தொடர்வறுத்துச் ஜோதியாய் 625
41. துண்என என்உளம் மன்னியஜோதி 639
42. அரிய பரஞ்ஜோதீ 647

## ஜோதி என்றால் என்ன? விடையாக வருகிறார் மகரிஷி.

உண்மையான சிவம் வெட்டவெளிதான் (சுத்தவெளி) என்றால், அது எல்லாவற்றிலும் ஊடுருவிப் பாயக் கூடியது.
அது வற்றாயிருப்பு, பேராற்றல், பேரறிவு, காலம் என்கின்ற நான்கு தன்மையும் உடையதாக இருக்கிறது.

அதை வைத்து நீங்கள் எந்தக் கணக்கு வேண்டுமானாலும் போடுங்கள். ஆனால் தாயுமானவர் "அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய்" என்ற வார்த்தைகளில் விளக்கினார்.
பிரகாசம் என்பதை ஜோதி என்று அந்தக் காலத்தில் சொன்னார்கள். அறிவைக் குறிப்பதற்காகத்தான் அந்த வார்த்தையையே போட்டிருந்தார்கள்.

ஜோதி என்றாலும், விளக்கு என்றாலும் ஒன்றே. "விளக்கம்" என்பதிலிருந்துதான் "விளக்கு" என்ற வார்த்தையே வந்திருக்கிறது.

விளக்குவதுதான் அறிவு. அதனால், அந்த அறிவை "சுடர்" என்றும், ஜோதி என்றும், விளக்கு என்றும் சொல்வார்கள்.
வள்ளலார் கூட ஜோதி என்று அறிவைத்தான் சொல்கிறார்.

இறைநிலை அறிவாக இருப்பதானால், அது ஜோதி வடிவமானது என்று சொல்கிறார்கள்.

அந்த முறையில் இறைநிலையை உணர்ந்து கொண்டீர்களானால், அதிலிருந்துதான் செயல்விளைவு தத்துவத்திற்கு வரலாம். அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் இருப்பதனால், அது எல்லோருள்ளும் இருக்கிறது.

அதனால்தான் எல்லோர் செயலையும் கண்காணிப்பதற்கு அதனால் சுலபமாக முடிகிறது.

உங்களுக்குள்ளேயே உள்ளதால், செயலுக்குத் தக்க விளைவை நீங்களே பெற்றுக் கொள்கிறீர்கள் என்கிறார் வேதாத்திரி மகரிஷி.

மாணிக்கவாசகர் சொன்னதை விளக்கமாகச் சொன்னார் மகரிஷி. பிரபஞ்சத்தின் காரணப் பொருளாகவும் காரண கர்த்தாகவும் இருப்பது பேரறிவு மற்றும் பேராற்றலுமான சுத்தவெளியே என்ற மாபெரும் உண்மையை மானுடத்திற்கு தந்தவர் நமது அருட்தந்தை வேதாத்திரி மகரிஷியே.

வாழையடி வாழையென வந்த சித்தர் மரபில் வந்தவர்களே மாணிக்கவாசககரும் மகரிஷியும்.

மாணிக்கவாசகரின் கருத்தினை உள்வாங்கி, அதோடு விஞ்ஞானத்தையும் சேர்த்து, மகரிஷி உலகெங்கும் உள்ள மக்களின் இதயத்தை தமது புத்தம்புது கருத்துக்களால் தொட்டார்.

திருவாசக வேதாத்திரிய சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 2.நால்வகைப் பேறுகள்

“மனிதன் பிறந்தது முதல் முடிவு வரையில் மகிழ்ச்சியோடும் மனநிறைவோடும் வாழ்வதற்கு அறம், பொருள், இன்பம், வீடுபேறு என்ற நால்வகைப் பேறுகளும் அடையவேண்டும்.

புலனின்பம் கெடாமல் காக்க மக்களோடு கொள்ளும் உறவில் அளவுமுறை கண்டு விழிப்புடன் செயலாற்ற வேண்டும்.

இவ்வாறு அறநெறி வழுவாத முறையில் பொருளும் இன்பமும் பெற்று வாழ்ந்தால் அறிவு நாளுக்கு நாள் சிறப்புற்று மேலோங்கி இறையுணர்வு பெற்று நிறைவான வாழ்க்கை எய்த முடியும்.

சுருக்கமாக சொல்வதென்றால் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் 4 வகைப் பேறுகளும் மனிதன் வாழ்வின் நிறைவுக்காகப் பெற வேண்டும். ஆயினும் இந்த நான்கில் ஒன்றால் மற்றொன்று கெடாமல் பார்த்து பெற்று துய்க்க வேண்டும்.

.

வீடு பேறு எனும் சொல்லின் பொருள், வீடு எனில் இடம் என்று பொருள். நாம் எந்த இடத்தில் இருக்கிறோம் உலகத்தின் மீது உலகம் உயிர்கட்கு இடமாக இருக்கிறது.

உலகம், எங்கு எந்த இடத்தில் இருக்கிறது. அது சூரிய குடும்பத்தில் உருண்டு, மிதந்து உலவிக் கொண்டிருக்கிறது.

சூரிய குடும்பம் எங்கே இருக்கிறது. எந்த இடத்தில் இருக்கிறது. சுத்தவெளியான இருப்பு நிலையே சூரிய குடும்பத்துக்கு இடம். வீடில்லா வீடு சுத்தவெளி. இவ்வெளியே எல்லாப் பொருட்களிலும் நிறைவாகவும் இயக்க ஒழுங்கான அறிவாகவும் இருக்கிறது.

.

மனிதனின் அறிவு உயர்ந்து தன்னை அறிந்து கொள்ளும் நிலையில் அறிவே மெய்ப்பொருளாக இருப்பு நிலையாகக் காட்சியாகும்.

வீடில்லா வீட்டின் வெட்ட வெளியே அறிவாக அறிவே தானாக உணரும் போது தான் வீடுபேறு. வீடுபேறு பெற்ற நிலையில் அறம் இயல்பாகும்.

அறவழியில் பொருளும் இன்பமும் பெற்று துய்க்கும் போது தான் அறிவிற்கு வீடுபேறு கிட்டும்.

இவ்வாறு அறமும் வீடுபேறும் மனித அறிவில் ஒன்றோடு ஒன்றாக ஒன்றில் ஒன்றாகத் தொக்கி நிற்கின்றன.

பிறவியின் பெருநோக்கத்தை எய்த அறத்தின் மூலமே பொருள், இன்பம், வீடுபேறு இவைகளைப் பெறுவோம். வளமுடனும் நலமுடனும் நிறைவுடனும் வாழ்வோம்." என்கிறது வேதாத்திரியம்

.

## அறிவின் அக நோக்குப் பயணம் வேதாத்திரியம்

"ஆன்மிகத் துறையென்ற அகல வழிப்பாதையிலே
அடிவைத்து மென்மேலும் முன்னேறிப் போகுங்கால்
அறிவுபெறும் அனுபவங்கள் வியப்பாகும், இனிமையாம்
ஆன்மஒளி சுடர்விட்டு உள்ளுணர்வுப் பேறாகும்."

.

"திறந்துகொள் தான் தனது என்று சொல்லும்
சிற்றறையை, வெளியேவா, அகன்று நோக்கி
பறந்துலவு உலக சமுதாயத்தின் பரப்பகத்தில்
பற்று அறும் கடமையினால் பழுக்கும் ஞானம்."

.

"தெய்வ அறிவே திருந்திய அறிவாம்;
உய்யும் நல்வழி உள்ளுணர் தவமே;
செய்யும் வினைகளைச் சீரமைத்திட
ஐயமில்லை அறும் பிறவித்தொடர்." (வேதாத்திரி மகரிஷி)

"வீடாய் விளங்கும் சிவலோகத்துக்குத் தலைவன்" என்று இறைவனை புகழ்கிறது திருவாசகம்.

“அட்டமூர்த்தி அழகன்இன்
    அதாய ஆனந்த வெள்ளத்தான்
சிட்டன் மெய்ச்சிவ லோகநாயகன்
    தென்பெ ருந்துறைச் சேவகன்
மட்டு வார்குழல் மங்கை யாளை
    ஓர்பாகம் வைத்த அழகன்தன்
வட்ட மாமலர்ச் சேவடிக் கண்நம்
    சென்னி மன்னி மலருமே.” (580)

- அட்டமூர்த்தமாக விளங்குவன். அழகன். அமுதம் போன்ற இன்ப வெள்ளத்தை அருளுபவன்.
- மேலானவன்.
- வீடாய் விளங்கும் சிவலோகத்துக்குத் தலைவன்.
- தெற்கிலுள்ள திருப்பெருந்துறை வீரன்.
- தேன் பொருந்திய பூக்கள் சூடிய கூந்தலை உடைய உமாதேவியைத் தன் இடப்பாகத்தில் வைத்துள்ள அழகே வடிவானவன்.
- அவனது தாமரை மலர்போன்ற சிவந்த திருவடியின்கீழ் நம்முடைய வட்ட வடிவ தலை நிலைபெற்று விளங்கட்டும்.

“வீடெனில் இடமாம். தேடிடத்தேடிட
    வீடிலாவீடு வெட்ட வெளியாகும்.
வீடெனும்மெய்ப்பொருள் வேக இயக்கமே.
    விண்முதல் நிகழச்சிகள் விவேகம் ஈறாக
வீடெனும்ஆதியே பொருள்எனக் கண்டபின்,
    விவேகம் அதனுடைச் சிறப்பென விளங்கும்.
வீடே அறிவெனும் விளக்கம் பெறுதலே,
    வீடுபேறாகும். விளங்கி விளக்கினேன்.” (ஞாக.பா.1487)

திருவாசக வேதாத்திரிய சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 3.இறை உறவு-சேவகன் நாயகன்:

“இறைவனை நோக்கித் தியானம் செய்தால், வேண்டினால் அவர் நமக்கு இன்னது இன்னது வேண்டும் என்று கேட்பதைக் கொடுப்பார் என்பதாக நாமே படித்தோ அல்லது பெரியவர்கள் சொல் மூலமாகக் கேட்டோ இறைவனை வழிபடுகிறோம்.

அங்கே உணர்வு தான்; மதிப்பு இல்லை என்று சொல்லவில்லை, அந்த மதிப்பு மாத்திரம் இருக்கிறது. ஏதோ கிடைக்க வேண்டும் என்ற ஆசை மிகுந்திருக்கிறது.

உறவிலே அப்படி அல்ல அங்கு முழுவதுமாகக் கலந்து நிற்கிறோம்.

எனக்கு அங்கே ஒன்று கிடைக்கும், இல்லை நான் இங்கிருந்து ஒன்று கொடுப்பேன் என்பதை எல்லாம் மறந்து, இரண்டும் ஒன்று கலந்த இடத்திலே ஏற்படுவது தான் உறவு. அந்த உறவை, அதாவது இறை-உறவை ஏற்படுத்திக் கொள்வது தான் ஜீவன் உய்வதற்கான வழி.

அடுத்து, இறை-உறவை ஏற்படுத்திக் கொள்ள வேண்டுமா என ஆழ்ந்து சிந்தித்துப் பார்க்கும் பொழுது என்ன தெரிய வருகிறது என்றால் அந்த உறவு தான் ஏற்கனவே இருக்கிறதே ஏற்படுத்த வேண்டும் என்பதில்லையே!

அதை அறிந்து உணர்ந்து கொள்ளும் போது எப்படி நாம் அவனை நினைக்காமல் இருந்தாலும் கூட எனக்குள்ளாகவே அறிவாக, உயிராக, இல்லமாக, உள்ளமாக (இல்லம் என்றால் உடல்; உள்ளம் என்றால் உயிர்) இருக்கக் கூடியவன் அவனேதான் என்ற ஒரு தெளிவு ஏற்பட்ட பிறகு அவன் வேறு, இவன் வேறு என்று நினைப்பதற்கில்லை.” என்கிறது வேதாத்திரியம்.

“கண்ணும் ஒளியும் காண்பவனும் ஒன்றேபோல்,
எண்ணம், இயற்கை, ஈசன் எனும் மூன்றும் ஒன்றாகும்”.

“பிரம்மம், பூரணம், அறிவு, ஆற்றல் எல்லாம் ஒன்றே”.

“பிறவிக்கடல் நீந்துதல் என்ற பெரிய காரணத்திற்காக
நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்”.

“நின்றிடு அகண்டாகாரம் நிலையினில்
வென்றிடுவாய் புலன் ஐந்தையும்; வெற்றியே!”

## அறிஞர்களின் பெருநோக்கம்:

“புத்தனென்ற பெரியாரும் இயேசுநாதர்
பொது நோக்கில் கவிபுனைந்த திருவள்ளுவர்
உத்தமராம் நபிகள் எனும் உயர்ந்த ஞானி
உண்மைக்கே உயிரளித்த சாக்கரட்டீஸ்
நித்தியமாம் நிலையளித்த ஞானியர்கள்
நில உலக மக்களுக்கு எடுத்துச் சொன்ன
அத்தனையும் சேர்த்து ஒரு தொகுப்பாய்ச் செய்தால்
அனைத்து மிணைந்து ஒரே கருத்தாய் இருக்கக் காண்போம்”.

எல்லா உயிர்களுக்கும் தலைவன் உறவாக இருப்பதை திருவாசகம் பாடுகிறது.

“நங்கை மீர் எனை நோக்குமின் நங்கள்
நாதன் நம்பணி கொண்டவன்
தெங்கு சோலைகள் சூழ்பெருந் துறை
மேய சேவகன் நாயகன்
மங்கை மார்கையில் வளையும் கொண்டுஎம்
உயிரும் கொண்டு எம் பணிகொள்வான்
பொங்கு மாமலர்ச் சேவடிக்கண்நம்
சென்னி மன்னிப் பொலியுமே.” (581)

- “பெண்களே! என்னைப் பாருங்கள்!
- நம்முடைய தலைவன்.
- நம்முடைய தொண்டை ஏற்றுக் கொள்பவன்.
- தென்னை மரச்சோலைகளால் சூழப்பட்ட திருப்பெருந்துறை வீரன்.
- எல்லா உயிர்களுக்கும் திருப்பெருந்துறை வீரன்.
- எல்லா உயிர்களுக்கும் தலைவன்.
- பெண்களின் கைகளில் அணிந்துள்ள வளையல்களையும், என்னுடைய உயிரையும் பறித்துக் கொண்டவன்.
- நம்மை ஏவல் கொள்பவன்.
- அவனது தாமரை மலர்போன்ற சிவந்த திருவடியின்கீழ் நம்முடைய தலை நிலையாகப் பொருந்தி விளங்கட்டும்

திருவாசக வேதாத்திரிய சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 4. ஞானமும் முக்தியும்

சிதம்பரம், மதுரை, திருவாலங்காடு, திருநெல்வேலி, குற்றாலம் ஆகிய ஐந்து இடங்களிலும் உள்ள சிவாலயங்களில் நடராஜர், தன் நடனத்தால் சிறப்பித்த சபைகள் இருக்கின்றன.

இவை பஞ்ச சபைகள் அல்லது ஐம் பெரும் சபைகள் என்று அழைக்கப்படுகின்றன. இந்த ஐந்து சபைகளும் பொற்சபை, ரஜித சபை அல்லது வெள்ளிசபை, ரத்தின சபை, தாமிர சபை, சித்திர சபை என்று வழங்கப்படுகின்றன.

## பொற்சபை

கடலூர் மாவட்டம் சிதம்பரத்தில் உள்ளது திருமூலட்டநாதர் ஆலயம். இங்கு அருள் பாலிக்கும் நடன நாயகன் நடராஜர் வீற்றிருக்கும் இடமே, பொற்சபை, பொன்னம்பலம், கனக சபை, பொன் மன்றம் என்று பல பெயர்களால் அழைக்கப்படுகின்றன.

இறைவன் தனது திருநடனத்தை, பதஞ்சலி முனிவர் மற்றும் வியாக்கிரபாதர் ஆகியோருக்கு அருளிய தலம் இதுவாகும்.

இந்த தலத்தில் நடராஜர், தனது இடது காலை ஊன்றி, வலது காலைத் தூக்கி நடனம் ஆடுகிறார். இங்கு இறைவனின் நடனம் ‘ஆனந்த தாண்டவம்’ என்று அழைக்கப்படுகிறது.

## சித்திர சபை

திருநெல்வேலி மாவட்டம் குற்றாலத்தில் உள்ள குற்றாலநாதர் ஆலயத்தில் இருக்கிறது சித்திர சபை. இங்கு எமனை சம்ஹரித்த இறைவன், பார்வதியுடன் மார்கண்டேயருக்கு அருளியபடி சித்திர வடிவில் காட்சி அளிக்கிறார்.

இங்கு நடனம் புரிந்த இறைவனின், தாண்டவத்தை கண்டுகளித்த பிரம்மதேவன், தானே இறைவனின் திருநடனத்தை ஓவிய வடிவில் வடித்ததாக கருதப்படுகிறது.

இந்த இடம் சித்திர சபை, சித்திர அம்பலம், சித்திர மன்றம் என்றெல்லாம் அழைக்கப்படுகிறது. இங்கு இறைவன் ஆடிய திருநடனம் ‘திரிபுர தாண்டவம்’ எனப்படுகிறது.

## ரத்தின சபை

திருவள்ளூர் மாவட்டம் திருவாலங்காட்டில் உள்ளது, ரத்தின சபை. இங்கு காளியை தனது நடனத்தின் மூலம் சிவபெருமான் வெற்றி கண்டார் என்கிறது தல புராணம்.

இந்த இடம் ரத்தின அம்பலம், ரத்தின சபை, மணி மன்றம் என்று பல பெயர்களால் வழங்கப்படுகிறது. இங்கு இறைவன் எட்டு கரங்களுடன், வலது காலை ஊன்றி இடது காலால் காதணியை மாட்ட ஆயத்தமாவது போல் காட்சியளிக்கின்றார்.

காளியுடன் நடந்த போட்டியில், காதில் இருந்து விழுந்த காதணியை இறைவன் தனது இடது காலால் எடுத்து இடது காதில் மாட்டி காளியை வெற்றி கொண்டார் என்கிறது தல வரலாறு.

காரைக்கால் அம்மையார், தன் தலையால் நடந்து சென்று, இங்குள்ள நடராஜரின் திருவடியில் அமர்ந்து, அனுதினமும் அவரது திருநடனத்தைக் காணும் பேறு பெற்றார். இங்கு இறைவன் ஆடும் நடனம் ‘ஊர்த்துவ தாண்டவம்’ என்று போற்றப்படுகிறது.

## வெள்ளி சபை

மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் அருளும் ஆலயமே ‘வெள்ளி சபை’ என்று போற்றப்படுகிறது. இதனை வெள்ளியம்பலம், வெள்ளி மன்றம் என்றும் போற்றுகிறார்கள்.

இங்கு அருள்பாலிக்கும் நடராஜர், தனது பக்தனான பாண்டிய மன்னனின் வேண்டுகோளுக்கு இணங்க, வலது காலை ஊன்றி, இடது காலைத் தூக்கி திருநடனம் புரிகிறார்.

இங்கும் முதலில் இறைவன் பதஞ்சலி, வியாக்கிர பாத முனிவருக்கு தில்லையில் காட்டிய காட்சியையே காட்டி அருளினார்.

அதன்பிறகு, பாண்டிய மன்னனின் வேண்டுகோள்படி, காலை மாற்றி ஆடி, அந்த நிலையிலேயே அருள்கிறார். இங்கு இறைவனின் நடனம் ‘சந்தியா தாண்டவம்’ என்றும் அழைக்கப்படுகிறது.

## தாமிர சபை

திருநெல்வேலி நெல்லையப்பர் கோவிலில் இருக்கும் நடராஜர் சன்னிதியே ‘தாமிர சபை’ என்று போற்றப்படுகிறது.

இங்கு தாமிரத்தால் ஆன அம்பலத்தில், இறைவன் தன் இடது காலை ஊன்றி வலது காலைத் தூக்கி திருநடனம் புரிகின்றார்.

இறைவன் நடனம் புரியும் சபையானது, தாமிர சபை, தாமிர அம்பலம், தாமிர மன்றம் என்று வழங்கப்படுகிறது. இங்குள்ள இறைவன் சந்தன சபாபதி என்று அழைக்கப்படுகிறார்.
இங்கு இறைவன் ஆடும் நடனமானது 'திருத்தாண்டவம் என்று சொல்லப்படுகிறது.

பத்தர் சூழப் பராபரன்
பாரில் வந்துபார்ப் பான்னனச்
சித்தர் சூழச் சிவபிரான்
தில்லை மூதூர் நடம்செய்வான்
எத்தனாகிவந்து இல்புகுந்து எமை
ஆளும் கொண்டு எம் பணிகொள்வான்
வைத்த மாமலர்ச் சேவடிக்கண்நம்
சென்னி மன்னி மலருமே." (582)

- மிகவும் மேன்மை உடைய எம் இறைவன், அன்பர்கள் புடைசூழ இந்நிலவுலகில் அந்தணனாக எழுந்தருளினான்
- எமது சிவபெருமான், ஞானியர் புடைசூழ பழைய ஊராகிய தில்லையில் நடனம் ஆடுகிறான்.
- சூழ்ச்சி நிரம்பியவனாய் வந்து. எம்உடம்பில் புகுந்து கொண்டு. எம்மை அடிமை செய்து, ஏவல் கொள்கிறான்.
- .அவனது நிலைத்த மலர் போன்ற சிவந்த திருவடியின்கீழ் நமது தலை பொருந்தி, நிலைத்து தங்கட்டும்.

## ஞானமும் முக்தியும் – வேதாத்திரியம்

"தவபலமும், தனையறிந்த நிலையும் கொண்டு
தனையடைந் தோர்க்கருள்புரியும் தகைமை யுள்ள
சிவநிலையோன் மெய்ஞ்ஞானி குருவாய் நின்று,
சீடனது புருவமையம் விரலால் தீண்ட,
அவனிலவன் லயமாகி ஆசான் தொட்ட,
அவ்விடத்தே ஞாபகத்தை ஒன்றி ஒன்றி,
உவமையிலாப் பேரின்பம் உள் உணர்ந்து.
ஒருமைத் தத்துவம் அறிந்தால், அதுவே முக்தி."

திருவாசக வேதாத்திரிய சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 5. மாய வாழ்க்கையை மெய்என்று

இன்றைய மனித மாய வாழ்க்கையைப் பற்றி ஈசுவர பட்டர் என்ன சொல்கிறார்?

இந்த உலகம் என்ற மாயையே எண்ணி மயங்கி வாழும் வாழ்க்கை தான் நாம் வாழ்கின்றோம்.

அப்படிப்பட்ட இந்த உலக வாழ்க்கையிலே
1.நமக்கு எஞ்சி இருப்பது எதுவப்பா?
2.வாழும் வாழ்க்கையில் மிஞ்சுவது என்னப்பா?
3.சொத்தையும் சுகத்தையும் ஆள்வது யாரப்பா?
4.இந்த உலகில் பிறந்து வாழ்ந்து இறந்த பின் நிலைத்து இருப்பது என்னப்பா?

நம் உடலா? சம்பாரித்த பணமா? சொத்தா? சுகமா?

நாம் இந்த உலகை விட்டுச் செல்லும் பொழுது நம்முடைய மக்கள் (பிள்ளைகள்) இருக்கின்றார்களே! என்ற எண்ணம் பலருக்குண்டு.

ஆனால் நம் பெயர் சொல்ல அந்த மக்கள் எத்தனை காலங்களுக்கு? பேரன்... கொள்ளுப் பேரன்.! என்று இப்படிச் சுற்றிக் கொண்டேயுள்ள நிலையிலே நம் பெயர் மறைய எத்தனை காலங்கள்? என்று சிந்திக்கின்றோமா...?

அம்மா...அப்பா... பற்றி சிறிது காலத்திற்கு எண்ணுகிறோம். அவர்கள் அம்மா அப்பா... அதற்கு முன்னாடி வாழ்ந்தவர்கள்! என்று யாரையாவது நாம் நினைக்கின்றோமா...?

எல்லாம் போய் விட்டார்கள்... என்று "சாதாரணமாகத்தானே சொல்கிறோம்...!"

அவர்கள் எதையுமே கொண்டு போகவில்லை என்கிற பொழுது நாம் மட்டும் எதைக் கொண்டு போக முடியும்...?

ஆக மொத்தம் பிறப்பு...உடல்...இறப்பு! மீண்டும் பிறப்பு... உடல்...இறப்பு...! என்று இராட்டினம் மாதிரித் தான் சுற்றிக் கொண்டே இருக்கின்றோம்.

இந்தப் பூமியில் பிறந்த நாம் அனைவரும்

1.பிறவிப் பயன்... பிறவிப் பயன்... என்பதையே புரிந்து வாழ்ந்திடாமல்
2.இருக்கும் வரை (உடலுடன்) அனுபவிக்க வேண்டும் என்று இப்படித்தான் எண்ணிக் கொண்டிருக்கின்றோம்.

எண்ணக் கடலில் செல்லும் நாம்...
எண்ணிய இடத்திற்குச் செல்வதற்கே...
எண்ணிய எண்ணத்தில் தான்...
ஏற்றமும் தாழ்வும் அமைவதுவே!

வினை மிகுந்த வாழ்வை நீக்கு முருகா என்று திருப்புகழ் பாடுகிறது.

மெய்யே என வெவ்வினை வாழ்வை உகந்து
ஐயோ, அடியேன் அலையத் தகுமோ?
கையோ, அயிலோ, கழலோ முழுதும்
செய்யோய், மயில் ஏறிய சேவகனே.

தந்திர சாஸ்திரங்கள் பல நிறங்களுக்கு பல விமர்சனத்தை தந்துள்ளன.

பிரம்மத்தை எந்த பாதிப்பும் இல்லாத வெள்ளை என்றும், அந்த பிரம்மத்தினின்று வெளிப்படும் அம்சம் சிவப்பு நிறம் என்றும் கூறுவார்கள்.

அருவமான பிரம்மத்தின் பிரகாச அம்சம் சிவப்பு நிறமாய் உருவான சிவனாகவும் முருகனாகவும் காட்சி அளிக்கிறது. ஆகையால் உலகம் உய்ய உருக் கொண்ட பிரமத்தின் விமர்சன அம்சமான முருகனைப் பற்றுதலே கதியாகும்.

இவ்வாழ்வு ஏற்படக் காரணம் நாம் முன் பிறவிகளில் செய்த வினைகளே.

வினைகள் மூன்று வகைப்படும். பல பிறவிகளில் சம்பாதித்த மூட்டையே.

சஞ்சிதம். இதிலிருந்து ஒரு பகுதியை இந்தப் பிறவியில் அனுபவித்து வருகிறோம். இதுவே பிராப்தம். இந்தப் பிறவியில் பல செயல்களைச் செய்து, புதிய வினைகளைச் சம்பாதிக்கிறோம்.

இவ்வாறு உயிர்கள் வினைகளை புசிக்க உதவுகின்ற சக்திக்கு திரோதானம் என்று பெயர்.

இந்த திரோதான சக்திதான் பொய்யான உலக வாழ்க்கையை மெய் என நினைக்கச் செய்கிறது. இவ் உலக வாழ்வுதான் மெய் என நினைக்கும் வரையில், வினை நாசம் ஆகாது. அது திருப்ப திருப்ப பிறவியைக் கொடுத்துக் கொண்டேதான் இருக்கும்.

இந்த வினைச் சுழலில் அகப்பட்ட உயிர், ஒரு துரும்புபோல் வருவதும் போவதுமாய் சுழன்று கொண்டேதான் இருக்கும். இதைத்தான் அலைதல் என்று இப்பாட்டில் கூறுகிறார்.

ஞானமே உருவானவன் கையில் ஞானமதையே வேலாயுதமாக வைத்துக் கொண்டிருக்கிறான்.

இப்படிப்பட்ட முருகனின் கருணையினால் ஞானிகள் இந்தப் பிறவியிலேயே பற்றை விட்டு, வினைத் தொடர்பு இல்லாமல் செயல்கள் செய்து, ஆகாம்ய வினையை நீக்குகிறார்கள்.

குருவின் அருளினால் சஞ்சிதம் அழிந்துபோகும். தம் மட்டும் அனுபவித்தே தீர்க்க வேண்டும். ஆனால் அருணகிரியார் அலங்காரத்தில்,

அவன் கால் பட்டு அழிந்தது இங்கு என் தலை
மேல் அயன் கையெழுத்தே ..

... என்பதாலும், 'ஆசார வீன', திருநாகேச்சுரம் – திருப்புகழில் (பாடல் 873),

.. நாசாதி பிராரத்த துக்க மிக்கவர் மாயா விகாரத்து

... என்பதாலும் தத்தையும் முருகன் அருள் இருந்தால் ஒழித்துவிட முடியும் என்று தெரிகிறது. வினை ஓட விடும் கதிர் வேல் என்பதால் வேலைத் தியானம் செய்தால் எல்லா வினைகளும் நசிந்து போகும் என்று உணரலாம்

“மாய வாழ்க்கையை மெய்என்று எண்ணி
    மதித்திடா வகை நல்கியான்
வேய தோள்உமை பங்கன் எங்கள்
    திருப்பெ ருந்துறை மேவினான்
காயத்துள் அமுது ஊறஊறநீ
    கண்டு கொள் என்று காட்டிய
சேய மாமலர்ச் சேவடிக்கண்நம்
    சென்னி மன்னித் திகழுமே.” (583)

- மூங்கில் போன்ற தோளினை உ         யைட பாகனே!
- எங்கள் திருப்பெருந்துறையில் எழுந்தருளி இருப்பவனே!
- பொய்னான உலக வாழ்வை மெய் என்று நினைத்து மதிக்காத வகையைத் தந்தாய்.
- இந்த உடம்பில் இன்பமாகிய அமுதம் மேலும் மேலும் சுரக்குமாறு செய்து. காண்பாயகாக! என்று காட்டி அருளினாய்.

- அந்த இறைவனின் சிவந்த தாமரை மலர் போன்ற திருவடிகளின்கீழ் நமது தலை பொருந்தி நிலைபெற்று விளங்கட்டும்.

## அறிவு தெளிய – வேதாத்திரியம்

"ஐந்துபுலன்கள் மூலம் உயிரின் ஆற்றல்
அழிவதையே இன்பமென உணர் மயக்கம்
சிந்தனையில் உயருங்கால் சீவ காந்தம்
சிதறுவதே ஐயுணர் வென்றறிந்து கொண்டோம்.
உந்த உந்தக் குணடலினி புருவ மையத்
தூறிவரும் பேரறிவின் ஆற்றல் பெற்று,
சொந்தத்தனி முயற்சியினாதல் வாழ் வாராய்ந்து
சொல்நினைவு செயல்மூன்றை ஒழுங்கு செய்வோம்."
(ஞாக.பா.1396)

திருவாசக வேதாத்திரிய சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 6. சுத்தவெளியில் நிலைத்திருப்போம்

சுத்த வெளியில் இருந்து திணிவு திணிவு உருண்டு முதலில் அணு என்று பெயரை எடுத்து, பிறகு பேரண்டத்திற்குள் வந்து அதைச் சூழ்ந்து அழுத்தும் காரணத்தினால் அணு வேகமாக சுழன்று அணுக்கள் கூடி?

அது மற்ற அணுக்களோடு இணைந்து அதன் சுழல் வேகத்திற்கு தக்கவாறு பௌதிகமாகி,

முதல் பூதம் என்ற விண், பின்பு காற்று, பின்பு நெருப்பு, பின்பு நீர், பின்பு கெட்டி பொருளாக அதன் வேகத்திற்கு தக்கபடி பஞ்சபூதமாகி

இதன் விகிதாசாரத்திற்கும் ஏற்ப உயிர்களாகி,

அறிந்து கொள்ளும் சக்தியை பெற்று ஓர் அறிவை பெற்று,

அறியும் வகையுள்ள உறுப்பையும் பெற்ற உயிரினமாகி, முறையே ஒன்று முதல் ஐந்து வித அறிவையும், உறுப்பையும் பெற்ற உயிரினணுக்களாகி

பின்பு நுட்பமான அறிவையும், உடல் அமைப்பையும், அழகான தோற்றத்தையும் பெற்ற மனிதனாகி,

அதன் பிறகு ஐந்தின் அறிவை கொண்டு முதிர்ந்து தெளிந்த பின்பு ஆறாவது பகுத்தறிவை பெற்று வாழ்கின்ற மனிதன் உயிர் இனங்களிலேயே உயர்ந்த நிலையில் வாழும் இனமாகும்.

மனிதர்க்கு மனிதர் உடல் தோற்றமும், உறுப்புகளின் தோற்றமும் ஒன்று போல் தெரிந்தாலும், கூட மனத்தோற்றத்தில் ஒருவருக்கு ஒருவர் பல்லாயிரக் கணக்கில் வேறுபடுகின்றனர்.

ஆகவே முதல் பூதமான விண், கண்களுக்கும் கருவிகளுக்கும் தெரியாமல் சுழன்று கொண்டிருக்கின்றன.

இதை ஆன்மீகவாதிகள் ஞானத்தால் உணர்ந்து கூறுகின்றனர். இதை பரமாத்மா என்று கூறுகிறார்கள்.

இரண்டாவது பூதமான காற்றை அளக்க முடியும். வகையை அறியும் தன்மை விஞ்ஞானிகளால் சொல்ல முடியவில்லை. காரணம் அதற்கு கருவிகள் இல்லை.

முன்றாவது பூதமான நெருப்பை உடலில் உள்ள போது கருவிகளின் துணை கொண்டு அளக்க முடியும். சூடு தோன்றிய காரணம், அதன் தன்மையை விஞ்ஞானிகளோ, மருத்துவர்களோ கூறமுடியாது. காரணம் அதற்கும் கருவிகள் இல்லை.

நான்காவது பூதமான நீர் தத்துவத்தை உடலில் இருக்கும் போது நிறத்தையும், அதன் தரத்தையும் சோதனை கருவிகளின் மூலம் அறிய முடியும். ஆனால் முலத்தை அறிய முடியாது. காரணம் கருவிகள் இல்லை.

ஐந்தாவது பூதமான கெட்டி பொருளான மண் தத்துவம் உடல் உறுப்புகளாக, உடற்பகுதிகளாக, தோற்றணுக்களாக, உட்பல பிரிவுகளாக, கோடான கோடி சிற்று உடம்புகளை (திசுக்கள் அணுக்கள்) கண்ணாலும், பெரிதுபடுத்தும் கருவிகளாலும் காண முடிகிறது.

பிறப்பை பற்றி ஔவையார் கூறுவதாவது:-

“பரமாய சக்தியுள் பஞ்சமா பூதம் தரம்
மாறி தோன்றலே பிறப்பு” என்கிறார்.

ஆகவே விண்ணை பற்றிதான் எல்லா ஞானிகளாலும் கூற முடிகிறது.

ஆகவே பிறவிகளிலே உயர்ந்தது மனித பிறவி.

“சித்தமே புகுந்து எம்மை ஆட் கொண்டு
    தீவினை கெடுத்து உய்யலாம்
பத்தி தந்து தன் பொற்கழல்கணே
    பன்மலர் கொய்து சேர்த்தலும்
முத்தி தந்து இந்த மூவுலகுக்கும்
    அப்பு றத்து எமை வைத்திடும்
அத்தன் மாமலர்ச் சேவடிக்கண்நம்
    சென்னி மன்னி மலருமே.” (584)

- பாவங்களைப் போக்கி,
- அன்பு செய்யத் தூண்டுதல் செய்து.

- தன்னுடைய பொன் போன்ற திருவடிகளுக்குப் பலவாய மலர்களைச் சாத்தி வழிபடச் செய்து.
- தன்னை மேல் கீழ் நடு என்று மூன்று உலகங்களிலும் சேராத வகையில்,
- அதற்கு அப்பால் உள்ள வீடுபேறு நல்கிய,
- தந்தையின் சிவந்த மலர் போன்ற திருவடியின் கீழ்,நமது தலை பொருந்த நிலை பெற்று விளங்கட்டும்.

### சுத்தவெளியே மெய்ப்பொருள் – வேதாத்திரியம்

"சுத்தவெளி மெய்ப் பொருளில்
சுழலியக்க விரிவுஅலை சேரக்காந்தம்.
இத்தகைய காந்தமது இடமொக்க
மின்சாரம், இரசாயனமாம்.
எத்தகைய இயக்கங்கள்
விண்துகளில், பருப்பொருளில், நிகழ்ந்த போதும்,
அத்தனையும் வான்காந்தக் களத்தினிலே
பதிவாகும். இருப்பு மாகும்." (ஞாக.பா.1111)

திருவாசக வேதாத்திரிய சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 7. மெய்த்தன்மையின் வல்லமை

தாயுமானவர் எடுத்த எடுப்பிலேயே, முதற் பாடலிலேயே வென்று விடுகிறார். தாயுமானவர் பாடலின் தொடக்கம், முதற்பகுதியின் பெயர் "திருவருள் விலாசப் பரசிவ வணக்கம்'.

அங்கிங்கெனாதபடி எங்கும் விளங்கும் பரம்பொருளின் வணக்கமாக மட்டுமல்ல, வெட்டவெளியின் வல்லமையையும் முதற்பாடலைப் பாடுகிறார் தாயுமானவர்.

"அங்கிங் கெனாதபடி எங்கும் ப்ரகாசமாய்

ஆனந்த பூர்த்தியாகி
அருளொடு நிறைந்தது தன்னருள் வெளிக்குளே
அகிலாண்ட கோடியெல்லாம்
தங்கும் படிக்கு இச்சை வைத்து உயிர்க் உயிராய்த்
தழைத்தது எது? மனவாக்கினில்
தட்டாமல் நின்றது எது? சமயகோ டிகளெலாம்
தம்தெய்வம் எம்தெய்வம் என்று
எங்கும் தொடர்ந்து எதிர் வழக்கிடவும் நின்றதுஎது?
எங்கணும் பெருவழக்காய்
யாதினும் வல்ல ஒரு சித்தாகி இன்பமாய்
என்றைக்கும் உள்ளது எது? மேல்
கங்குல்பகல் அறநின்ற எல்லையுள்ளதுஎது அது
கருத்திற்கு இசைந்ததுவே
கண்ட வெலாமோன உருவெளிய தாகவும்
கருதி அஞ் சலிசெய்குவாம்” (தாயுமானவர் பா.1)




சமய கோடிகள் எல்லாம் தம்தெய்வம் எம் தெய்வம் என்று எங்கும் தொடர்ந்து வழக்கிட நின்றது எது? எங்கணும் பெருவழக்காய் உள்ளது எது? அதுவே கருத்துக்கு இசைந்தது, எல்லார் கருத்துக்கும் இசைந்தது, பொதுக் கருத்துக்கு இசைந்தது என்று அதனைக் கருதி மெய்ப்பொருளின் வல்லமை அஞ்சலி செய்கிறார்.

சுத்தவெளி என்ற மெய்ப்பொருள் என்பது என்றும் நீடித்து நிலைத்திருப்பது.

இணையற்ற எல்லா வல்லமைகளும் உடைய, எவ்விடத்திலும் ஊடுருவி நிறையத் தக்கது

மேன்மையான, தடையற்ற ஒளி ஊடுருவத்தக்க, கனமுடைய, புனித ஆவிப்பொருளானது.

கும்மிருட்டான பூரணமான அதன் ஆற்றலை எப்போதும் பெருக்கிக் கொண்டே இருக்கும்,

இயல்புடைய தன்னிறுக்கப் பேராற்றல் ஆன இது, திணிவு பெறும் இடத்தில் அதுவே மடிப்பு விழுந்து, முடிச்சுகளாகித் தற்சுழற்சி பெற்று நுண் விண்ணாகித் தள்ளும் விசையாக மாறக்கூடியது.

ஓர் அனைத்தியக்கப் பேராற்றலே, அனைத்தடக்கத் தத்துவமான இறைவெளியாகும்.

இப்பேராற்றலே கண்களுக்குப் புலப்படாத மாயக்கயிறு போல், பேரியக்க மண்டல முழுமையும் நிறைந்து, அனைத்தையும் தன்னில் இணைத்துக் கொண்டு செயல்புரிகின்றது.

இதுவே பிரஞ்சத் தோற்றங்கள் அனைத்துக்கும் மூலநிலையாகவும் பேராற்றலாகவும் உள்ளது.

இதுவே எல்லாம் உணரும் பேரறிவாகவும், மதிப்புடைய தெய்வம் என்றும் கருதப்படுவதாகும்.

“பிறவி என்னும் இக் கடலைநீந் தத்தன்
பேரருள் தந்து அருளினான்
அறவை என்ற அடியார்கள் தங்கள்
அருட்கு ழாம்புக விட்டுநல்
உறவு செய்து எனை உய்யக்கொண்ட
பிரான்தன் உண்மைப் பெருக்கமாம்
திறமை காட்டிய சேவடிக்கண்நம்
சென்னி மன்னித் திகழுமே.” (585)

- பிறவி என்னும் இந்தக் கடலை நீந்திக் கரையேற பேரருள் செய்வன்.
- அடியேனுக்கு வேறு துணை இல்லை என்பது அறிந்து, தன்னுடைய அடியார் திருக்கூட்டத்தில் சேர்த்துக் கொண்டான்.

- அவர்களை எனக்கு உறவினர் ஆக்கினான்.
- எம்பெருமான் தன்னுடைய மெய்த்தன்மையின் வல்லமையை எல்லாம் காட்டி, என்னை உய்யுமாறு செய்தான்.
- அவனது தாமரை மலர் போன்ற சிவந்த திருவடியின் கீழ் நமது தலை பொருந்தி, நிலைபெற்று விளங்கட்டும்.

### மெய்த்தன்மையின் வல்லமை – வேதாத்திரியம்

"உணர்ச்சிக்கு எட்டுகின்ற தோற்றம் யாவும்
உண்மையிலேயே பொருளல்ல. நிகழ்சியேதான்!
உணர்ச்சியோ உயிராற்றல். உயிரோ தெய்வ
உவப்புதான். உண்மைநிலை தெய்வமேதான்!" (ஞாக.பா.1120)

### உலகத் தத்துவ இரகசியம் வேதராத்திரியம்

"வெட்டவெளி சக்தி என்பதில்லையானால்
வேறு எந்தப் பொருள் வலிது பிரபஞ்சத்தில்?
தொட்ட தொடப்பட்ட இரு பொருட்களூடே
தொட தொட்டதாய் எண்ணும் அரூபம் யாது?
பட்டப் பகலில் வானில் மீன்கள் தோன்றா
பார்வையில்லார்க்கவை எந்த நாளும் காணா
எட்டவில்லை அறிவிற்கு என்றால் உள்ள
இயற்கைத் தத்துவம் எங்கே ஒளிந்து கொள்ளும்?". (ஞாக.பா.1381)

வேதாத்திரிய திருவாசக சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

## 8. அன்பர்களுக்கு அருளும் குற்றம் அற்றவன்

ஏழை குடும்பத்தில் பிறந்தவன் ரத்னாகரன். பெற்றோர்கள் அந்த ரத்னாகரனை நல்லவனாக வளர்த்தார்கள். குழந்தை பருவத்தில் வறுமை என்றால் என்ன என்று தெரியாதவரை அவனும் நல்லவனாகதான் வாழ்ந்தான்.

ரத்னாகரன் இப்போது ஒரு இளைஞன். அவன் தந்தைக்கும் வயதானது. முன்புபோல அவரால் வேலை செய்து சம்பாதிக்க முடியவில்லை. இதனால் வறுமை என்கிற கொடுமையும் ரத்னாகரனின் குடும்பத்தில் ஒருவராக குடிவந்தது.

குடும்பமே உணவு இல்லாமல் பசி மயக்கத்தில் கிடப்பதை கண்டு மனம் வருந்தினான் ரத்னாகரன். என்ன செய்வது? என்று அவனுக்கு தெரியவில்லை.

படிப்பறிவும் இல்லாத நமக்கு யார் வேலை தருவார்கள்? என்ற கேள்விச் சிந்தனையுடன் ஒரு இடத்தில் அமர்ந்திருந்தான்.

பலமணிநேரமாக ஒரே இடத்தில் அவன் இருப்பதை கண்ட ஒரு நபர் ரத்னகரனின் அருகில் வந்து, "தம்பி, உன்னை பார்த்தால் பசியில் இருப்பதாக நினைக்கிறேன். உனக்கு உணவு ஏற்பாடு செய்யட்டுமா?" என்றார்.

அதற்கு ரத்னாகரன், "அய்யா.. என் ஒருவனுக்கு இப்போது உணவு கிடைத்தால் போதுமா.? என்னை நம்பி இருக்கும் ஜீவன்கள் வீட்டிலே உணவு இல்லாமல் பசி மயக்கத்தில் இருக்கிறார்கள். அவர்களையும் நான் காப்பாற்ற வேண்டும். அதற்கு எனக்கு ஒரு வேலை வேண்டும். எனக்கு நீங்கள் இன்று ஒருநாள் பிச்சையிடுவதை விட ஏதாவது ஒரு வேலையில் சேர்த்துவிடுங்கள்." என்றான் ரத்னாகரன்.

"அதுவும் நல்லது. உனக்கு வேலைதானே வேண்டும். நான் ஏற்பாடு செய்கிறேன்." என்றவர், ரத்னாகரனின் கைகளில் பணத்தை திணித்து, "இந்த பணத்தை நீ உன் குடும்பத்தினரிடம் தந்துவிட்டு மீண்டும் என்னிடம் திரும்பி வா. உனக்காக இங்கேயே காத்திருக்கிறேன்." என்றார் அந்த நபர்.

அந்த பணத்தில் உணவு வாங்கிக் கொண்டு வீட்டுக்கு விரைந்து வந்தான் ரத்னாகரன். உணவு மட்டுமல்லாமல் மகன் கை நிறைய பணத்துடன் வந்திருப்பதை இருப்பதை கண்ட அவன் பெற்றோர், அதை பற்றி கேட்டார்கள். நடந்ததை சொன்னான். எந்த வேலை, யார்

கொடுப்பார் என்பதை பற்றியெல்லாம் விசாரித்து அறியாமல், “எந்த வேலையாக இருந்தாலும் அதை ஏற்று நீ செய்.” என்றார்கள். வறுமை அப்படி அவர்களை பேச வைத்தது.

தன்னை நம்பி பெரிய தொகையை கொடுத்த அந்த நபர் நிச்சயம் தெய்வம் என்று எண்ணி அவரை சந்திக்க சென்றான் ரத்னாகரன்.

ரத்னாகரனை தன் குதிரையில் ஏற்றி கொண்டு தன் வசிப்பிடத்திற்கு சென்றார் அந்த நபர். அந்த இடத்தை பார்த்தவுடன் புரிந்துக்கொண்டான் ரத்னாகரன்.

இவர்கள் கொள்ளைகாரர்கள்.

தன்னை அழைத்து வந்தவரும் இந்த கொள்ளைகூட்டத்தின் தலைவன்.

“நீங்கள் எல்லோரும் கொள்ளைகாரர்களா?.” என்றான் ரத்னாகரன்.

“சபாஷ் நீ தோற்றத்தில் பலசாலி என்று மட்டும்தான் நினைத்தேன். நாங்கள் யார் என்று நாங்கள் சொல்லாமலே புத்திசாலித்தனமாக புரிந்துக் கொண்டாய்.” என்று கூறிகொண்டே. “ஆம். நாங்கள் கொள்ளைகாரர்கள்தான். நீயும் எங்களுடன் இணைந்து கொள்ளையடி. அந்த பணத்தை நாம் பங்கிட்டுக் கொள்வோம்.

கொள்ளை அடிக்கும்போது ஒரு வேலை கொலை செய்யவும் நேரலாம். அந்த தருணத்தில் அதையும் நீ தயங்காமல் செய். எந்த அரசனாலும் நம்மை தேடி கைது செய்ய முடியாது.” என்று ரத்னகரனின் மனதில் முரட்டு தைரியத்தை ஏற்படுத்தினான் கொள்ளை கூட்டத்தின் தலைவன்.

ரத்னாகரன் கொள்ளையடித்தான். பெரியதொகையை தினமும் சம்பாதித்தான். பணம் வந்த உடன் குடும்பத்தில் மகிழ்ச்சி ஏற்பட்டது. ரத்னாகரனுக்கு திருமணமும் செய்து வைத்தனர் அவனுடைய பெற்றொர்.

ரத்னாகரன் தம்பதிக்கு அழகான ஆண் குழந்தை பிறந்தது. குடும்ப சுமை கூடியதால் மேலும் அதிகமாக கொள்ளையடித்தான்.

## காட்டில் கிடைத்த ஞானம்

ஒருநாள் காட்டுவழியாக கொள்ளையடிக்க சென்றுக் கொண்டு இருந்த ரத்னாகரன் கண்களில் ஒருவர் தன்னந்தனியாக தென்பட்டார். அவரை மடக்கி பிடித்து கத்தியை காட்டி, "இருப்பதை எடு. இல்லை என்றால் கொன்றுவிடுவேன்." என்று மிரட்டினான் ரத்னாகரன்.

"தாராளமாக தருகிறேன். அதற்கு முன் நான் கேட்கும் கேள்விகளுக்கு பதில் சொல். நீ யாருக்காக கொள்ளையடிக்கிறாய்." என்றார்.

"இது என்ன முட்டாள்தனமான கேள்வி. என் குடும்பத்திற்காகதான்." என்றான் ரத்னாகரன்.

"ஓ... அப்படியா. சரி... நீ கொள்ளையடித்து சம்பாதிப்பதையெல்லாம் மகிழ்ச்சியுடன் ஏற்றுகொள்ளும் உன் குடும்பம், உன் செயலால் உண்டாகும் பாவத்தையும் ஏற்பார்களா.?" எனக் கேட்டார்.

"ஏற்பார்கள்" என்றான் ரத்னாகரன்.

"இதை நீயே சொன்னால் எப்படி. இந்த கேள்வியை உன் குடும்பத்தினரிடம் சொல்லி அவர்களின் பதிலை கேட்டு வந்து சொல். நான் எங்கேயும் போக மாட்டேன். இங்கேயேதான் இருப்பேன்." என்றார் அந்த நபர்.

அதன்படி தன் வீட்டுக்கு வந்த ரத்னாகரன், "நான் செய்யும் பாவங்களையும் நீங்கள் ஏற்றுக் கொள்வீர்களா? எனக் கேட்டான்.

"அது எப்படி முடியும். உன் குடும்பத்தை காப்பாற்ற வேண்டியது உன் கடமை. அதனால் ஏற்படும் இன்ப-துன்பத்தையும் நீதான் ஏற்க வேண்டும். பாவமும் உன்னையே சேரும். அதில் எங்களுக்கு பங்கில்லை." என்றார்கள்.

“உன் பாவத்தை நான் ஏற்று தண்டனையை அனுபவித்தால் உன் தந்தையை யார் கவனிப்பார்கள்.” என்றாள் தாய்.

“உன் பாவத்தை நான் ஏற்று தண்டனையை அனுபவித்தால் உன் தாயை யார் கவனிப்பார்கள்” என்றார் தந்தை. தன் மனைவியிடம் கேட்டான்.

“நீங்கள் செய்யும் பாவத்தை நான் எப்படி ஏற்க முடியும். பிறகு நம் மகனை யார் கவனிப்பார்கள். அதனால் நான் ஏற்க மாட்டேன்.” என்றாள் மனைவி.

மகனிடம் கேட்டார். “நீங்கள்தானே என் தந்தை. அதனால் என்னை நன்றாக வளர்க்க வேண்டியதும் உங்கள் கடமை. அப்படி இருக்க உங்கள் பாவத்தை நான் எவ்வாறு கேட்க முடியும்.” என்றான் மகன்.

இப்படி ஒவ்வொருவரும் ஏதோரு காரணத்தை சொல்லி பாவத்தை ஏற்காமல் தட்டி கழித்தார்கள்.

மனம் வருந்திய ரத்னாகரன் காட்டில் பார்த்து பேசியவரை தேடி சோகத்துடன் வந்தான்.

## மரா மரா

“என்ன ரத்னாகரா... உன் பாவத்தை பங்கிட்டுகொண்டதா உன் குடும்பம்.” என கேட்டார்.

“சுவாமி....நீங்கள் யார்?” என்றார் ரத்னாகரன்.

“அதான் நீயே சுவாமி என்று சொல்லிவிட்டாயே. ஆனால் என்னையோ எல்லோரும் கலகக்காரன் என்கிறார்கள். நான் உன்னிடம் கலகமா செய்தேன்.” என்றவர் நாரதராக தோன்றினார்.

அவரை வணங்கினான் ரத்னாகரன்.

“சுவாமி...யார் உங்களை கலகக்காரன் என்று சொன்னாலும் நான் அப்படி சொல்ல மாட்டேன். உங்களால் எனக்கு இன்று ஒரு உண்மை விளங்கியது. மரம் செழுமையாக இருக்கும் போது பறவைகள் அதில் வாழும். அந்த மரம் பட்டு போனால் பறவைகள் ஒடிவிடும் என்பதை பார்த்திருக்கிறேன். அதுபோல என்னை ஒரு மனிதனாக பார்க்காமல் அந்த மரத்தை போலவே என்னை நினைக்கிறார்களே. அப்படி என்றால் அந்த மரத்தின் நிலையும், என் நிலையும் ஒன்றா? போதும் நான் செய்த பாவங்கள். என் பாவங்களுக்கு என்ன பரிகாரம் சுவாமி.?” என்றார் ரத்னாகரன். அவன் விழிகளில் மழைபோல கண்ணீர்.

“பாவம் தொலைய இரண்டெழுத்து மந்திரத்தை உண்டு. அதுதான் “இராமா” என்கிற மந்திரம். இராம நாமத்தை உச்சரிக்க உச்சரிக்க பாவம் தொலையும்.” என்றார் நாரத முனிவர்.

இதுநாள்வரை ரத்னாகரன் செய்த பாவங்கள் தடுத்ததோ என்னவோ, நாரதர் சொல்லி தந்த புனிதமான, “ராமா” என்கிற வார்த்தை ரத்னாகரன் நாவில் வரவில்லை. இதனால் நாரதர், “ரத்னாகரா... உன் வாயில் மரம் என்கிற வார்த்தை எளிதாக வருகிறது. அதனால் மரா மரா என்று உச்சரித்தப்படி இரு.” என்று கூறி சென்றார்.

அதன்படி தவத்துக்கான ஒரு இடத்தை தேர்வு செய்து அமர்ந்து, மரா மரா மரா மரா மரா மரா மரா மரா என்று உச்சரிக்க உச்சரிக்க அதுவே ராம ராம ராம ராம ராம என்று எளிதாக சொல்ல வந்தது.

ரத்னாகரன் பல வருடங்களாக ஒரே இடத்தில் ராம நாமத்தை உச்சரித்து கொண்டே இருந்ததால் அவரை புற்று மூடியது. ஒருநாள் “வால்மீகி” என்று ஒரு அசரிரீ குரல் கேட்டது. புற்றிலிருந்து வெளிப்பட்டார் வால்மீகி.

ரத்னாகரனுக்கு அசரிரீ, “வால்மீகி” என்று புதிய பெயர் சூட்டியது. இதனால் அவரை வால்மீகி முனிவர் என்று ஊர்மக்களும் அழைத்தார்கள்.

ஒருசமயம், நதிகரையில் ஆண் பறவையும் பெண் பறவையும் அமர்ந்திருந்தது. அவற்றை பார்த்துக்கொண்டே குளித்தார் வால்மீகி.

அப்போது எங்கிருந்தோ ஒரு அம்பு பறந்து வந்த ஆண் பறவையை தாக்கியது. இதனால் அந்த பறவை இறந்தது. இதை கண்ட வால்மீகி முனிவர் பெரும் கோபத்தோடு, அம்பு ஏய்த வேடனை கவிநடையில் சபித்துவிட்டு தன் ஆசிரமம் வந்தடைந்தார். பிறகுதான் தமக்கு “கவிஞானம்” வந்துவிட்டது என்பதை உணர்ந்தார்

அப்போது பிரம்மா வால்மீகி முனிவர் முன்தோன்றி, “நீ மிகப்பெரிய கவிஞனாக மாறினாய். எல்லாம் இராமனின் அருளே. நீ இராமசரித்திரத்தை எழுது.” என்று வரத்தை தந்தார்.

வால்மீகி முனிவரால் நமக்கு “இராமாயணம்” என்கிற பெரும் இராமகாவியம் கிடைத்தது.

“புழுவி னால் பொதிந் திடுகுரம் பையில்
　பொய் தனை ஒழி வித்திடும்
எழில்கொள் சோதிஎம் ஈசன்எம்பிரான்
　என்னு டைய அப்பன் என்றுஎன்று
தொழுத கையினர் ஆகித் தூய்மலர்க்
　கண்கள் நீர்மல்கு தொண்டர்க்கு
வழுவி லாமலர்ச் சேவடிக்கண்நம்
　சென்னி மன்னி மலருமே.” (586)

- புழுக்கள் நிரம்பிய உடம்பில் தங்கும் பொய்யான வாழ்க்கையை அழிக்கும், அழகிய ஒளி வடிவினன்.
- “எம்மை ஆளுபவன்.
- எம் தலைவன் எம் தந்தை என்றெல்லாம் கூறிக் கும்பிடும் கையினை உடையவராய்,
- தூய மலர் போன்ற கண்களில் கண்ணீர் உகுக்கும் அன்பர்களுக்கு அருளும் குற்றம் அற்றவன்.
- அவனது தாமரை மலர் போன்ற சிவந்த திருவடிகளின் கீழ் நமது தலை பொருந்தி, நிலைத்து விளங்கட்டும்.

இருள் போக்கும் யோகம் கற்போம் – வேதாத்திரியம்

“அருள்விளக்கம் இல்லாத குறையில் மக்கள்
அனைத்து நலனும் இழந்து துன்பம் ஏற்று,
பொருள்காக்க, பூகாக்க, பொன்னைக் காக்கப்,
போரிட்டு மடிகின்றார். அந்தோ! வாழ்வில்
மருள்போக்கி. மக்கள் ஒத்துதவி வாழ,
மனத்தூய்மை வினைத்தூய்மை பெற்றுள் ளத்தில்
இருள்போக்கும் அகத்தவமும், அகத்தாய்வும் பின்
இனிதளிக்கும் குண்டலினி யோகம் கற்பீர்!” (ஞாக.பா.1484)

வேதாத்திரிய திருவாசக சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 9. வல்வினைப் பகை மாய்த்திடும்

அது ஒரு முன்னிரவுப் பொழுது... தன் ஆசிரமத்தின் தாழ்வாரத்தில் அமர்ந்து படித்துக்கொண்டிருந்தார் ஷிசிரி கோஜுன்.

அவர் படித்துக்கொண்டிருந்தது புத்த ஜாதகக் கதைகள். அதில் அப்படியே ஆழ்ந்து போயிருந்தார்.

திடீரென்று ஒரு சத்தம்...

“ஏய்... உன்னைத்தான்... இப்போ திரும்பப் போறியா, இல்லியா?’ ’ ஷிசிரி நிமிர்ந்து பார்த்தார்.

ஒருவன் கையில் மின்னும் கத்தியுடன் அவரை முறைத்துப் பார்த்துக் கொண்டிருந்தான். அந்த ஆசிரமத்தில் வேறு யாராவது இருக்கிறார்களா என்று நோட்டம் விட்டான்.

“நீ யாரப்பா... உனக்கு என்ன வேண்டும்?’ ’

``நானா... இன்னுமா உனக்குப் புரியலை? உன் வீட்ல திருட வந்திருக்கேன். ம்... உன்கிட்ட இருக்குற பணம் எல்லாத்தையும் கொடு. இல்லைனா என்ன நடக்கும் தெரியுமா?’ ’

“என்ன நடக்கும்?”

“ம்... என் கையில என்ன இருக்குனு பார்த்தேல்ல..? பணம் வேணுமா... உயிர் வேணுமா?’ ’

“சரி, சரி... உனக்குப் பணம்தானே வேண்டும்? என்னைத் தொந்தரவு செய்யாதே! நீயே போய் எடுத்துக்கொள். அதோ... அந்த மேசை இழுப்பறையில் சிறிது பணம் வைத்திருக்கிறேன் என்ற ஜென் துறவி ஷிசிரி மீண்டும் புத்த ஜாதகக் கதையைப் படிப்பதில் ஆழ்ந்துபோனார்.

திருடன் அசந்துபோனான். `இப்படியும் ஒரு மனுசனா? என் கையில இருக்குற கத்தியைப் பார்த்துக்கூட இந்த ஆளுக்குப் பயம் வரலையே! ஒருவேளை வேற யாராவது பின்னாடி வந்து நம்மை அடிச்சுப் போடத் திட்டம் போட்டிருக்கானா? சே... சே...

அப்படியிருக்காது. ஆளைப் பார்த்தாலே சாது மாதிரி தெரியுது. அப்படியே யாராவது இருந்திருந்தாலும், இந்நேரம் என்னைப் பிடிக்க வந்திருக்கணுமே..! இப்படியெல்லாம் யோசித்தவனாக அவன் ஜென் துறவி காட்டிய மேசையருகே போனான்.



மேசையைத் திறந்தான். அதிலிருந்த மொத்தப் பணத்தையும் அப்படியே எடுத்தான். அப்போது ஷிசிரியின் குரல் கேட்டது.

“என்னப்பா பணத்தை எடுத்துவிட்டாயா? நான் சொன்னேன் என்பதற்காக மொத்தப் பணத்தையும் எடுத்துக்கொண்டு போய்விடாதே. நாளை நான் செலுத்தவேண்டிய வரி பாக்கி கொஞ்சம் இருக்கிறது. அதற்காகக் கொஞ்சம் பணத்தை மட்டும் எனக்காக வைத்துவிடு. என்ன... சரியா?’ ’

திருடன் யோசனையுடன் அவரைப் பார்த்தான். அந்தத் துறவியின் குரல் அவனை என்னவோ செய்தது. அவனால் அதை அலட்சியம் செய்ய முடியவில்லை.

எடுத்த மொத்தத் தொகையிலிருந்து சிறிது பணத்தை எடுத்து மேசை இழுப்பறையில் வைத்தான். கிளம்பினான். அவன் வாசல் கதவை அடைந்தபோது, ஷிசிரியின் குரல் அவனைத் தடுத்தது.

“ஏனப்பா... வந்தாய், என் பணத்தை எடுத்தாய். ஒரு நன்றிகூடச் சொல்லாமல் போகிறாயே... இது உனக்கே சரி எனப்படுகிறதா?’ ’

திருடன் அதிர்ந்து போனான். இவ்வளவு தைரியமாகத் தன்னிடம் பேசும் ஒரு மனிதனை அவன் வாழ்நாளில் கண்டதில்லை. அவன் ஷிசிரியின் அருகே வந்தான்.

“எனக்குப் பணம் கொடுத்ததுக்கு ரொம்ப நன்றி ஐயா...’’ என்றான். வெளியேறினான்.

ஷிசிரி மறுபடியும் வாசிப்பதில் ஆழ்ந்துபோனார்.

அந்தத் திருடன் வெகுநாள்களாக, பல வழக்குகளாக உள்ளூர் காவலர்களால் தேடப்பட்டு வந்தவன். ஷிசிரியின் ஆசிரமத்திலும் அவன் கைவரிசைக் காட்டிய செய்தி வெளியே பரவியது.

காவலர்கள் தங்கள் தேடுதல் வேட்டையைத் தீவிரப்படுத்தினார்கள். ஒரு நாள் அவன் மாட்டிக்கொண்டான். விசாரணை நடந்தது.

ஷிசிரியின் ஆசிரமத்தில் திருடியதற்கு சாட்சி சொல்லும்படி அவருக்கு அழைப்பு போனது. அவரும் வந்தார். அவரிடம் விசாரித்தார்கள்.

“இவன் என்னிடம் எதையும் திருடவில்லை. என்னிடமிருந்து சிறிது பணத்தைப் பெற்றுக்கொண்டான். அதற்கு நன்றிகூட சொல்லிச் சென்றான்” என்றார் ஷிசிரி கோஜுன். அப்படி அவர் சொன்னது அவன் உள்ளத்தைத் தொட்டுவிட்டது.

ஆனாலும், பிற குற்றங்களுக்காக அந்தத் திருடன் சிறையில் அடைக்கப்பட்டான். வெளியே வந்ததும், அவன் ஷிசிரியிடமே சீடனாகச் சேர்ந்தான். பல ஆண்டுகள் அவருடன் இருந்து ஞானமும் பெற்றான்.

வம்ப னாய்த்திரி வேனைவாவென்று
வல்வி னைப் பகை மாய்த்திடும்
உம்ப ரான் உலகு ஊடு அறுத்து
புறத்தனாய் நின்ற எம்பிரான்
அன்ப ரானவர்க்கு அருளி மெய்யடி
யார்கட்கு இன்பம் தழைந்திடும்
செம்பொன் மாமலர்ச் சேவடிக்கண்நம்
சென்னி மன்னித் திகழுமே.” (587)

- பயனற்றவனாய்த் திரிந்து கொண்டிருந்த என்னை, வா!” என்று அழைத்து, எனது வலிய வினையாகிய பகை அழியுமாறு செய்தவன்.
- எல்லா உலகங்களுக்கு உள்ளும் ஊடுருவி, அதற்கு அப்பாலாய் நிற்கும் மேலானவன்.
- அவன் எம் தலைவன்.
- அன்பர்களுக்கு அருளுபவன்.
- உண்மை அடியார்களுக்கு வீடுபேற்று இன்பம் மிகுமாறு செய்பவன்.
- செம்பொன்னால் செய்யப்பட்ட மலர் போன்ற சிவந்த திருவடியின்கீழ் நமது தலை பொருந்தி, நிலைத்து விளங்கட்டும்.

வேதாத்திரியம் என்ன சொல்கிறது?

வினைக்குஒரு விளைவுண்டு. உடல் உள்ளத்தின்
விரைவு ஆற்றலுக்கு அது ஒத்தால் இன்பம்.
முனை த்துஅது பருஉடற்கோ மூளைக்கோ ஓர்
முரண்பட்ட விளைவானால் துன்பம் ஆகும்.
தனக்கும்அது பிறருக்கும், உடல் மூளைக்குத்
தவறாக அணு அடுக்கைச் சீர்குலைத்து
மனக்களங்கம் உடலில் நோய்ப் பதிவாய்க் கொள்ளும்.
மதித்துவினை விளைவுகளை கணி தது, வாழ்வீர்.”
(ஞாக.பா.1289)

வேதாத்திரிய திருவாசக சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

## 10. மூல விதை எது?

இப்பிரபஞ்சத்தில் எங்கும் எதிலும் இயக்கம் இருக்கிறது. இயக்கத்தின் மூலமான அறிவு இருக்கிறது. எங்கும் எதிலும் நீக்கமற இருக்கிற அறிவாகிய வெளியெ தெய்வம்.

அந்த தெய்வத்தை உங்ளுக்குள் உணர்வது தியானம். உங்கள் பக்கத்தில் இருப்பவரிடம் தெய்வத்தைக் காண்பது அன்பு.

வேதாத்திரியம் என்பது இணையாது என்று இருந்த விஞ்ஞானத்தையும், மெய்ஞ்ஞானத்தையும் ஒன்றிணைத்த பிரம்ம ஞானம்.

இறைவெளி என்பது மெய்ஞ்ஞான அம்சம். இறுக்கம் என்பது விஞ்ஞான அம்சம், இறைவெளிக்குத் தன்னிறுக்கம் உண்டென்று வேதாத்திரி மகரிஷி உணர்ந்தபோது மெய்ஞ்ஞானமும் விஞ்ஞானமும் இணைந்து விடுகின்றன.

எல்லையற்ற வெளிதான் தெய்வம். வெளியின் வெளிப்பாடே இப்பிரபஞ்சம்.

வெளிப்பாட்டின் முழ முதல் இயக்கவிசை வெளியின் தன்னிறுக்கமே எனப் பலப்பல செய்திகளைத் தருகின்ற உலகப் பொதுவான இறைஞானம் வேதாத்திரியம்.

"இறைநிலை தன்னிறுக்கத்தால் எழுந்த முதல் தன்மாற்றம் இறைத்துகளாம்.

இறைத்துகள் கூடியதோர் தொகுப்பே விண்
நிறைவெளியில் விண் சழல வெளியழுத்த விளைவாக
விண்கரைய அக்கரைசல் வெளியேற
அனைத்து அலைகள் காந்தமாச்சு" (வேதாத்திரியம்)

காந்தத்தின் மூலம் விண்ணின் சுழற்சி. சுழற்சியின் மூலம் இறைவெளயின் தன்னிறுக்கம்.

இறைவெளி, விண், காந்தம் என்னும் மூன்றின் கூட்டாக, இப்பிரபஞ்த்தைப் பார்த்தால் வேதாத்திரியம் சைவசிந்தாந்தத்தை நமக்கு நினைவூட்டும். மாறாக வெளியின் வெளிப்படாக

பிரபஞ்சத்தைப் பார்த்தால் வேதாத்திரியம் விஞ்ஞானம் கலந்த அத்வைதம்.

மூலமே ஞானமான வேதாத்திரிய விஞ்ஞானத்தை பயிலும் இடம் எது? ஊரேங்கும் உள்ள மனவளக்கலை மன்றங்களும், அறிவுத்திருக்கோயில்களும்.

முத்த னைமுதல் சோதியை முக்கண்
    அப்பனை முதல் வித்தனைச்
சித்த னைச்சிவ லோக னைத்திரு
    நாமம்பாடித் திரிதரும்
பத்தர் காள்இங்கே வம்மின்நீர் உங்கள்
    பாசம் தீரப் பணியினோ
சித்தம் ஆர்தரும் சேவடிக்கண்நம்
    சென்னி மன்னித் திகழுமே” (588)

- இயல்பாகவே பாசங்களில் இருந்து விலகி இருப்பவனை,
- ஒளியின் முதலை,
- மூன்று கண்களை உடைய தந்தையை,
- எல்லா வற்றுக்கும் மூல விதையாக விளங்குபவனை,
- ஞானமயமானவனை,
- சிவலோகத்ததுக்கு உரிமை உடையவனை,
- அவனது திருப்பெயர்களைச் சொல்லி திரியும்அன்பர்களே!
    - நமது சிந்தையில் பொருந்தி, நிலைபெற்று விளங்கட்டும்.

வேதாத்திரியம் என்ன சொல்கிறது?

“சுத்தவெளியே அனைத்தடக்கப் பூரணமாகவும்,
பேராற்றலாகவும் பேரறிவாகவும் இருப்பதால்
சுத்தவெளியே எங்கும் ஊடுருவி நிறைந்து
சீவன்களுக்குள் அறிவாகவும் இயங்குகிறது.
சித்தம் என்றால் உயிர்த்துகள் மையத்திலே
அமைந்துள்ள அறிவு ஆகும்.
அங்கிருந்து புலன்கள் மூலமாகப்

படர்க்கை நிலை எய்தி மனமாக
இயங்கிக் கொண்டிருக்கிறது. (வேதாத்திரி மகரிஷி)

மூலமான சுத்தவெளி ஒரு பேராற்றல்

நாம் எங்கே வாழ்கிறோம்? பூமி, உருண்டை என்ற உலகின் மீது. இந்த பூவுலகின் எடை என்ன இருக்கும்? பல கோடி டன்கள் இருக்கலாம் அல்லவா?

இதே உலகம் ஆண்டுக்கு ஒரு முறை சூரியனை வலம் வந்து கொண்டிருக்கிறது. இந்த சூரியனின் எடை எவ்வளவு இருக்கும்?

பூமியைவிட சூரியன் 3.33 லட்சம் தடவை எடை அதிகமாக உள்ளது. இப்பொழுது யூகிப்போம்.

சூரியனும், பூமியும் சேர்ந்தால் மொத்த எடை எவ்வளவு இருக்கும்? நம்மால் சாதாரணமாக கணக்கிடவே முடியாது.

எனினும், நமது யூகத்தால் ஓரளவு அனுமானம் கொள்ளலாம். சூரியனும், பூமியும் சேர்ந்து கணக்கிலடங்காத கோடி கோடி டன்கள் எடை இருக்கும் என்று நம்பலாம்.

அடுத்தபடியாக, சூரியனும், பூமியும் எங்கே இருக்கின்றன? இரண்டு கோள்களுமே சுத்தவெளியில்தான் லேசாக மிதந்து, உருண்டு ஓடிக் கொண்டிருக்கின்றன. இது மறுக்க முடியாத உண்மை.

இப்பொழுது சிந்திப்போம். ஒரு பொருள் மீது இன்னொரு பொருள் மிதக்கிறது என்று சொன்னால் எந்தப் பொருள் வலிதாக இருக்கும்? மிதக்கும் பொருளைவிட தாங்கும் பொருள்தான் வல்லமை உடையாதாக இருக்க வேண்டும்.

இந்த கருத்தை மனதால் கணித்துப் பார்த்தோமானால் சூரியன், பூமி இரண்டைவிட சுத்தவெளி அதிக வல்லமை உடையதுதான் என்று ஐயமின்றி விளங்கிக் கொள்வோம்.

இதனால், சுத்தவெளி எந்த ஆற்றலும் இல்லாத ஒரு வெற்றிடம். அல்லது சூன்யம் என்ற கருத்து மாறிவிடுகிறது.

நமக்குத் தெரிந்த சூரியக் குடும்பத்தையும் மேலும் ஆகாய வெளியில் உலவும் கோடிக்கணக்கான சூரியக் குடும்பங்களையும் லேசாகத் தாங்கிக் கொண்டிருக்கும் சுத்தவெளியின் பேராற்றலும் அதன் வல்லமையும் இணையற்றது என்று விளங்கிக் கொள்கிறோம். அந்த மூலம்தான் ஞாலமாகியது என்பதை புரிந்து கொண்டோம்.

வேதாத்திரிய திருவாசக சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். ஆனந்தம் ஆனந்தம் ஆனந்தமே! வாழத்தெரிந்திடில் ஆனந்தமே!!! வாழ்க வளமுடன்.

வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் சென்னிப்பத்து

## YOUTUBE LINKS

1. ஜோதி ஜோதி ஜோதி https://youtu.be/-dt5xwQsgW6
2. நால்வகைப் பேறுகள் https://youtu.be/R5LNx5T7vdE
3. இறை உறவு-சேவகன் நாயகன் https://youtu.be/vZnm8TE4oAw
4. ஞானமும் முக்தியும் https://youtu.be/t6eyDhdg7Qo
5. மாய வாழ்க்கையை மெய்யென்று https://youtu.be/ryGvAVIY7Go
6. சுத்தவெளியில் நிலைத்திருப்போம் https://youtu.be/pqLSt5YH12o
7. மெய்த்தன்மையின் வல்லமை https://youtu.be/lA_YUAuKCBA
8. அன்பர்களுக்கு அருளும் குற்றம் அற்றவன் https://youtu.be/5N92HRYMyj4
9. வல்வினைப் பகை மாய்த்திடும் https://youtu.be/cNXiG3W6tRM
10. மூல விதை எது? https://youtu.be/QmsZwiUVAnY

# துணைநின்ற நூல்கள்.

1. திருவாசகம், சுவாமி சித்பவானந்தர், திருப்பராய்த்துறை.

2. திருவாசகம், புலவர் வீ.சிவஞானம், விஜயா பதிப்பகம், கோவை.
3. ஞானக்களஞ்சியம், வேதாத்திரி மகரிஷி, வேதாத்திரி பதிப்பகம், ஈரோடு.
4. இணையதள தகவல்கள்.
5. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000, மன்னார்குடி பானுகுமார். விஜயா பதிப்பகம், கோவை.
6. மாணிக்கவாசகரும் வேதாத்திரி மகரிஷியும், மன்னார்குடி பானுகுமார். www.banukumar.in
7. சுவாமி விவேகானந்தரின் ஞானதீபம், ஸ்ரீராமகிருஷ்ணமடம், சென்னை
8. தத்துவ சிகரங்கள், அழகர் இராமானுஜம்
9. ஜென்னும் வேதாத்தரியமும், மன்னார்குடி பானுகுமார்.
10. மாணிக்கவாசகரும் வேதாத்திரி மகரிஷியும், மன்னார்குடி பானுகுமார்.

# பானுகுமார் படைப்புலகம்

(145 புத்தகங்கள்)

PDF www.banukumar.in

## ஆன்மீகம்

1. தியானம் பழக 100 தியான சிந்தனைகள்
2. அறிவியல் நோக்கில் 100 ஆன்மீகச் சிந்தனைகள்
3. கோள்களை வென்ற இடைக்காட்டுச் சித்தர்

## வாழ்க்கை வரலாறு

1. நெப்போலியன் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
2. புத்தர் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
3. இயேசுவின் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்

4. குருவுடன் வாழ்ந்தவர் (புலவர் தியாகராஜனார்)
5. வேதாத்திரி மகரிஷி வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்

## தன்னம்பிக்கை தன்னம்பிக்கை

1. தன்னம்பிக்கை மலர்கள்.
2. டென்சனை வெல்வது எப்படி?
3. காலமே உன் உயிர்
4. வேதாத்திரி மகரிஷியின் வாழ்வை வளமாக்கும் எண்ணங்கள்
5. ஓய்வுக்குப் பின்னும் உற்சாக வாழ்க்கை

## வேதாத்திரி மகரிஷி 1

1. இந்திய தத்துவ வரலாற்றில் வேதாத்திரி மகரிஷி
2. வேதாத்திரி மகரிஷி பற்றி 100 அறிஞர்கள்.
3. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000 (பாகம் 1)
4. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000 (பாகம் 2)
5. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000 (பாகம் 3 )
6. தினசரி தியானம்.
7. வரலாறு போற்றும் குரு சீடர்கள்
8. "வாழ்க வளமுடன்" என்ற வார்த்தை! சரியா? தவறா? இலக்கணம் என்ன சொல்கிறது?
9. பன்முகப்புரட்சியில் வேதாத்திரி மகரிஷி
10. பன்முகப் பார்வையில் வேதாத்திரி மகரிஷி
11. வேதாத்திரி மகரிஷியின் தத்துவ தரிசனங்கள்
12. எல்லாம் வல்ல தெய்வமது
13. போரில்லா நல்லுலகம்
14. அதுவானால் அதுவே சொல்லும்
15. உய்யும் வகை தேடி அலைந்தேன்.
16. தினந்தோறும் வேதாத்திரியம்
17. வாழும் வேதாத்திரியம்
18. என்னைச் செதுக்கிய வேதாத்திரியத்தின் ஞானக்களஞ்சியம்
19. வேதாத்திரி மகரிஷி வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
20. மகரிஷியின் வாழ்வை வளமாக்கும் எண்ணங்கள்

21. தாயுமானவர் வள்ளலார் வேதாத்திரி மூவரும் ஒருவரே
22. வேதாத்திரியம் கற்போம்
23. மனைவிக்கு மரியாதை
24. எல்லாம் வல்ல தெய்வமது
25. வேதாத்திரியப் பார்வையில் வறுமை என்பது இல்லை.
26. அவதாரப் புருஷர் அருட்தந்தை

## ஒப்பாய்வு (வேதாத்திரி மகரஷி)

1. வள்ளலாரும் வேதாத்திரி மகரிஷியும்.
2. மகாவீரரும் வேதாத்திரி மகரிஷியும்
3. தாயுமானவரும் வேதாத்திரி மகரிஷியும்
4. ஞாலம் போற்றும் ஞானிகள்
5. வேதாத்திரியத்தில் கலந்த நதிகள்.
6. ஞானதீபமும் ஞான ஒளியும்.
7. கிழக்கும் மேற்கும்
8. வேதமுதல்வரும் வேதாத்திரியும்
9. ஞான வள்ளல்கள் (ஸ்ரீராமகிருஷ்ணரும் வேதாத்திரி மகரஷியும்)
10. பாமரமக்களின் தத்துவஞானிகள் (அச்சில்)
11. சித்தர்களும் வேதாத்திரி மகரிஷியும்.
12. மாணிக்க வாசகரும் வேதாத்திரியும்
13. சிவவாக்கியாரும் வேதாத்திரி மகரிஷியும்.
14. ஆனந்தக் களிப்பும் பேரின்பக் களிப்பும்
15. சுகவாரியும் பேரின்ப ஊற்றும்
16. பட்டினத்தாரும் வேதாத்திரி மகரிஷியும்
17. கன்பூசியசும் வேதாத்திரி மகரிஷியும்
18. ஐன்ஸ்டைனும் வேதாத்திரியும்

## தாயுமானவரும் வேதாத்திரி மகரிஷியும் (ஒப்பாய்வு)

1. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் ஆனந்தமான பரம்.
2. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் சின்மயானந்த குரு.
3. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பொருள் வணக்கம்.

4. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் தேஜோமானந்தம்.
5. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் எங்கும் நிறைந்த பொருள்..
6. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் சச்திதானந்த சிவம்.
7. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் கருணாகரக் கடவுள்
8. தாயுமானவர் வள்ளலார் வேதாத்திரி மூவரும் ஒருவரே

## திருவாசகமும் வேதாத்திரியமும் **(ஒப்பாய்வு)**

1. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் யாத்திரைப் பத்து.
2. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அச்சப் பத்து.
3. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அடைக்கலப் பத்து.
4. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் செத்திலாப் பத்து.
5. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அதிசயப் பத்து.
6. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் உயிர் உண்ணிப் பத்து.
7. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குழைத்தப் பத்து.
8. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் பிடித்தப் பத்து.
9. வேதாத்திரியப் பார்வையில்திருவாசகத்தின் பிரார்த்தனைப் பத்து.
10. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் சிவபுராணம்
11. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் ஆசைப் பத்து
12. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அச்சோ பதிகம்
13. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அருட்பத்து
14. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அற்புதப்பத்து
15. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அன்னைப்பத்து
16. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் கண்டபத்து
17. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குயிற்பத்து
18. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் சென்னிப்பத்து
19. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் புணர்ச்சிப்பத்து
20. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் வாழாப்பத்து
21. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் ஆனந்த பரவசம்
22. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குலாப்பத்து

## பாரதியாரும் வேதாத்திரியமும் (ஒப்பாய்வு)

1. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் ஞானப்பாடல்கள்
2. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் தத்துவப் பாடல்கள்
3. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் பிரம்மஞானம்
4. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் மானுட சிந்தனைகள்

## ஜென்னும் வேதாத்திரியமும்

1. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 1
2. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 2
3. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 3
4. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 4
5. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 5

## தாயுமானவர் தாயுமானவர்

1. சேரவாரும் ஜெகத்தீரே
2. தாயுனவரின் இலக்கிய நயம்
3. தாயுமானவரின் மெய்ப்பொருள்
4. தாயுமானவரின் சமயநெறி
5. தாயுமானவரின் உடல் பொய்யுறவா?
6. தாயுமானவரின் கடவுள் கோட்பாடு
7. தாயுமானவரும் மகான்களும்
8. தாயுமானவர் ஆன்மீக வாதியா? அரசியல் ஞானியா?
9. தாயுமானவர் தரும் இடம், பொருள், ஏவல்
10. தாயுமானவரின் அத்வைதமும் வேதாத்திரியின் அத்வைதமும்
11. தாயுமானவரின் ஆன்மீகச் சிந்தனைகள்
12. தாயுமானவரின் ஞானதாகம்
13. தாயுமானவரின் இலட்சியப் பயணம்
14. தாயுமானவரின் பிரபஞ்சக் கோட்பாடு
15. தாயுமானவரின் உயிர் விளக்கம்
16. GARLAND OF PARAAPARAM

17. தாயுமானவர் போற்றும் அறம்
18. அறிவேதான் தெய்வமென்றார் தாயுமானவர்
19. ஏன் அவதரித்தார்கள்?
20. தாயுமானவரின் பரநடையும் உலக நடையும்
21. இன்பம் பெறும் வழி யாது? தாயுமானவர்
22. தாயுமானவர் பாடல்களில் மனம்
23. தாயுமானவர் வழிபாடு ஏன்?
24. தாயுமானவருக்கு மறுபிறவி உண்டா?
25. கல்லாத பேர்களே நல்லவர்கள் தாயுமானவர்
26. கடவுளின் விலாசம் தருகிறார் தாயுமானவர்
27. தாயுமானவர் எதை பலி கொடுக்கச் சொன்னார்?
28. தாயுமானவர் தரும் இறைவழிபாடு
29. தாயுமானவருடன் வாழ்வோம்
30. தாயுமானவரின் உவமைகள் 100

## ஜென்னும் திருவாசகமும்

1. ஜென்னும் திருவாசகமும் பாகம் 1
2. ஜென்னும் திருவாசகமும் பாகம் 2
3. ஜென்னும் திருவாசகமும் பாகம் 3

## புலவர் தியாகராஜனார்

1. குருவுடன் வாழ்ந்தவர்
2. வரலாறு போற்றும் குரு சீடர்கள்
3. புலவர் தியாகராஜனார் அரிய செய்திகள் 100
4. குரு பக்தியின் வடிவம் புலவர் தியாகராஜனார்

## மன்னார்குடி

1. மன்னார்குடி மன்னார்குடிதான் அரிய செய்திகள் 1000
2. ஞாபகம் வருதே ஊர் ஞாபகம் வருதே!
3. மன்னார்குடி வரலாறு

## தன்னம்பிக்கை தன்னம்பிக்கை

1. தன்னம்பிக்கை மலர்கள்.
2. டென்சனை வெல்வது எப்படி?

3. காலமே உன் உயிர்
4. வேதாத்திரி மகரிஷியின் வாழ்வை வளமாக்கும் எண்ணங்கள்.
5. ஓய்வுக்குப் பின்னும் உற்சாக வாழ்க்கை
6. தன்னம்பிக்கை மலர்கள்

## சிறுகதைகள்

1. செயலே விளைவு
2. தவம்

## ஆராய்ச்சி

நன்மக்கட்பேறு 100 நற்சிந்தனைகள்

# vethathiriam Banukumar (Youtube channel)

2000 க்கும் மேற்பட்ட விடியோக்களை அடியிற்கண்ட 119 தலைப்புகளில் vethathiriam Banukumar vஎன்ற யூடியூப் சேனலில் கேட்டு மகிழலாம்.

1. வேதாத்திரி மகரிஷி வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள் பாகம்
2. வேதாத்திரி மகரிஷி ஒப்பாய்வு இலக்கியம் பாகம் 1
3. வேதாத்திரி மகரிஷி ஒப்பாய்வு இலக்கியம் பாகம் 2
4. விவேகானந்தரும் வேதாத்திரி மகரிஷியும் பாகம் 1
5. விவேகானந்தரும் வேதாத்திரி மகரிஷியும் பாகம் 1
6. விவேகானந்தர் கதைகளும் வேதாத்திரியமும்
7. ராமகிருஷ்ணர் கதைகளும்
8. வேதாத்திரியமும் ஸ்ரீராமகிருஷ்ணரும் வேதாத்திரி மகரிஷியும்
9. பட்டினத்தாரும் வேதாத்திரி மகரிஷியும்
10. பென்ஞமின் பிராங்களினும் வேதாத்திரி மகரிஷியும்
11. மாக்கிய வெல்லியும் வேதாத்திரி மகரிஷியும்
12 தாயுமானவரின் சுகவாரியும் வேதாத்திரியாரின் பேரின்பக் ஊற்றும்

13. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பரசிவ வணக்கம்.
14. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பரிபூரணானந்தம்
15. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் ஆனந்தமான பரம்
16. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் மௌனகுரு வணக்கம்
17.வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் தேஜோ மயானந்தம்
18.வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பொருள் வணக்கம்
19.வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் சின்மயானந்த குரு
20.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் பிடித்த பத்து
21.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அதிசயப் பத்து
22. வேதாத்திரிய பார்வையில் திருவாசகத்தின் பிரார்த்தனைப்பத்து
23.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அடைக்கலப் பத்து
24.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குழைத்த பத்து
25.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் ஆசைப் பத்து
26.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் செத்திலா பத்து
27.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் உயிர் உண்ணிப் பத்து
28.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் யாத்திரைப் பத்து.
29.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அச்சப் பத்து
30.வேதாத்திரியப் பார்வையில்தி ருவாசகத்தின் அச்சோ பதிகம்
31.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் சிவபுராணம்
32.மாணிக்கவாசகரும் வேதாத்திரி மகரிஷியும்
33.புத்தக வெளியீடு
34.வேதாத்திரிய சிந்தனைகள் பாகம் 1
35.வேதாத்திரிய சிந்தனைகள் பாகம் 2
36. வேதாத்திரிய சிந்தனைகள் பாகம் 3
37. வேதாத்திரிய சிந்தனைகள் பாகம் 4
38.வேதாத்திரியப் பார்வையில்பாரதியாரின் மானுட சிந்தனைகள்
39.வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் ஞானப் பாடல்கள்
40.வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் பிரம்மஞானம்
41.வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் தத்துவ பாடல்கள்
42.ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 1
43.ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 2
44.ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 3
45ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 4
46.ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 5
47.காலமெல்லாம் வேதாத்திரியம்

48.வேதாத்திரியப் பார்வையில் ஆழ்வார்கள் காட்டும் முக்தி
49.என்னைச் செதுக்கிய நூல்
50.தினசரி தியானம் சனவரி
51.தினசரி தியானம் பிப்ரவரி
52.தினசரி தியானம் மார்ச்
53.தினசரி தியானம் ஏப்ரல்
54.தினசரி தியானம் மே
55.தினசரி தியானம் ஜூன்
56.தினசரி தியானம் ஜூலை
57.தினசரி தியானம் ஆகஸ்டு
58.தினசரி தியானம் செப்டம்பர்
59.தினசரி தியானம் அக்டோபர்
60.தினசரி தியானம் நவம்பர்
61.தினசரி தியானம் டிசம்பர்
62.தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 1
63. தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 2
64.தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 3
65.தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 4
66தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 5
67.தாயுமானவர் ஒப்பாய்வு இலக்கியம்
68.ஜென் புத்தரும் தாயுமானவரும் பாகம் 1
69.ஜென் புத்தரும் தாயுமானவரும் பாகம் 2
70.ஜென் புத்தரும் தாயுமானவரும் பாகம் 3
71.தாயுமானவரின் ஆனந்தக்களிப்பு
72.மாணிக்கவாசகர் சிந்தனைகள்
73.ஜென்னும் திருவாசகமும் பாகம் 1
74.ஜென்னும் திருவாசகமும் பாகம் 2
75.ஜென்னும் திருவாசகமும் பாகம் 3
76.புலவர் தியாகராஜனார்
77.ஞாபக அலைகள் (மன்னார்குடி) பாகம் 1
78. ஞாபக அலைகள் (மன்னார்குடி) பாகம் 2
79.அறிவியல் நோக்கில் ஆன்மீகச் சிந்தனைகள் பாகம் 1
80.அறிவியல் நோக்கில் ஆன்மீகச் சிந்தனைகள் பாகம் 2
81.அறிவியல் நோக்கில் ஆன்மீகச் சிந்தனைகள் பாகம் 3
82.ஆன்மீகம் ஆன்மீகம்

83.டென்சனை வெல்வது எப்படி? பாகம் 1
84.டென்சனை வெல்வது எப்படி? பாகம் 2
85.டென்சனை வெல்வது எப்படி? பாகம் 3
86.தன்னம்பிக்கை தன்னம்பிக்கை
87.சுயமுன்னேற்றம்
88.பத்திரகிரியார் சிந்தனைகள்
89.மன்னார்குடி
90.ஆராய்ச்சி நன்மக்கட்பேறு
91.பொதுவானவை
92.மனைவிக்கு மரியாதை
93.திருமூலர் சிந்தனைகள்.
94.ஆண்டாள் சிந்தனைகள்
95.திருமழிசைஆழ்வார் சிந்தனைகள்
96.திருக்குறள; சிந்தனைகள்
97.அப்பர் சிந்தனைகள்
98.பட்டினத்தார் சிந்தனைகள்
99.பட்டினத்தார் ஒப்பாய்வு
100.சிவவாக்கியார் சிந்தனைகள்
101.ஔவையார் சிந்தனைகள்
102.சித்தர்கள் சிந்தனைகள்
103.திருமங்கையாழ்வார்
104.வள்ளலாரின் சிந்தனைகள்
105.பசி என்னும் பாவி
106.பொருள் வறுமையா? அறிவு வறுமையா?
107. Retirement Speech
108..Audio speech part 1
109.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அருட்பத்து
110.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அற்புதப்பத்து
111.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அன்னைப்பத்து
112.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் கண்டபத்து
113.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குயிற்பத்து
114.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் சென்னிப்பத்து
115.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் புணர்ச்சிப்பத்து
116.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் வாழாப்பத்து
117.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குலாப்பத்து

118.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் ஆனந்த பரவசம்
119. மனவளக்கலையில் வாசி யோகமா?